தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, புரட்டாசி 1, திருவள்ளுவர் ஆண்டு – 2046

2015 செப்டம்பர் 18, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வெள்ளத்து அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு."

தண்ணீரில் மலர்ந்திருக்கும் பூவினுடைய தண்டினது நீளம், தண்ணீர் உயரத்திற்கு இருக்கும். அதேபோல், ஒருவர் உள்ளத்தில் ஊக்கம் எந்த அளவு இருக்கின்றதோ, அந்த அளவிற்கு உயர்வு இருக்கும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 286, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

286—

கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்துதல்

***6173—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள கால்நடை மருந்தகத்தைத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 செப்டம்பர் 18

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள கால்நடை மருந்தகத்தை அனைத்து வசதிகளுடன் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் கால்நடை மருந்தகம், அரசு விதிகளுக்குட்பட்டு இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் கால்நடை மருந்தகம், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மற்றும் ஒன்றியப் பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு சிறந்த மருந்தகமாகச் செயல்பட்டு வருகிறது. ஸ்ரீவில்லிபுத்தூரைச் சுற்றியுள்ள கிராமங்களில், அதிக அளவில் கால்நடை வளர்ப்போர் உள்ளனர். அதிக அளவு நோய்வாய்ப்பட்ட கால்நடைகளை, சிறப்பு நிபுணர்களின் கண்காணிப்பிற்குக் கொண்டு சென்று சிகிச்சை அளிக்க வேண்டுமென்றால், 50 கிலோ மீட்டர் தூரமுள்ள விருதுநகர் கால்நடை மருத்துவமனைக்குத்தான் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இது விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும் சிரமத்தை ஏற்படுத்துகிறது. எனவே, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள கால்நடை மருந்தகத்தை, operation theatre, x–ray போன்ற வசதிகளுடன், கால்நடை மருத்துவமனையாக இந்த ஆண்டே தரமுயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகத்தைத்

2015 செப்டம்பர் 18]

தரமுயர்த்துவதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அதாவது, அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேற்பட்டிருக்க வேண்டும். அதேபோன்று, 20 சென்ட் நிலத்திலே கால்நடை மருந்தகம் கட்டப்பட்டிருக்க வேண்டும். அங்கே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டித் தரும் அளவிற்கு அங்கே போதிய இடம் இருக்க வேண்டுமென்றும் விதிகள் இருக்கின்றன. இந்த விதிகளெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மருந்தகத்திற்குப் பொருந்தி வருவதால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் கால்நடை மருந்தகத்தின்கீழ் 41 கால்நடைக் கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மருந்தகம் ஸ்ரீவில்லிபுத்தூர்-சிவகாசி சாலையில், 4½ ஏக்கர் இடவசதியுடன் அமைந்துள்ளது. கடந்த ஐந்து வருடங்களில், கருவூட்டல் மூலமாக 5,777 கால்நடைகள், கன்று பிறப்பிற்கு 1,530 கால்நடைகள், குடற்புழு நீக்கத்திற்காக 1,43,361 கால்நடைகள், ஆண்மை நீக்கத்திற்காக 3,439 கால்நடைகள், R.D.V.K. சிகிச்சைக்காக 46,987 கால்நடைகள், இதர சிகிச்சைகளுக்காக 44,365 கால்நடைகள் என ஏறத்தாழ 2,45,459 கால்நடைகளுக்கு இந்த மருந்தகத்திலே சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பகுதியில் உள்ள கால்நடை வளர்ப்போரின் நலன் கருதி, ஸ்ரீவில்லிபுத்தூர் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர ஆவன செய்து, நடவடிக்கை எடுப்பதாகச் சொன்ன மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 287, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.